**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 146/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : சங்கரசுப்பிரமணியன் |
| Father's Name/ Husband's Name | : கணேசமூர்த்தி |
| Village & Taluk | : விழுப்புரம் |
| Calling | : காவல் ஆய்வாளர் |
| Age | : 45 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2026**

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**காணொலி மூலமாக சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**சாட்சி System analyst திரு. மணி, காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்ற அலுவலரால் அடையாளப்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட விஷ்னுகாஞ்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.02.2020 அன்று 11.00 மணியளவில் செஞ்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 ராஜவேந்தன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 73/2020 பிரிவுகள் 294(b), 506(2) of IPC –ன் கீழ் மு.த.அ பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ–2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு நான் அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரிசை முறையே அசாஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் ராஜவேந்தன், ராஜேஷ்குமார், மோகன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவரை கடந்த 11.02.2020ம் தேதி, 15.30 மணிக்கு மொடையூர் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டின் முன்பு வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 2ம் எதிரி குணசேகரன் என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று பிணையில் சென்றுவிட்டபடியால் அவரை கைது செய்ய இயலவில்லை.

பின்பு நான் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 506(ii)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 செஞ்சி நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். கடந்த 08.02.2020 அன்று அ.சா.1ற்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமான தகராறு ஏற்பட்டது தொடர்பாக இரு தரப்பினைரையும் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்திருந்தேன் என்றால் சரிதான். அ.சா.1ம் எதிரிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். 06.02.2020 அன்று கிராமத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் அது தற்போது நினைவில் இல்லை.

2. இவ்வழக்கின் சம்பவமானது 11.02.2020 அன்று நடைபெற்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சம்பவம் 08ம் நடைபெற்றுள்ளது புகார் மனு பெற்று வழக்கு பதிவு செய்தது 11ம் தேதி ஆகும். அ.சா.1 கடந்த 08.02.2020 அன்றே புகாரினை என்னிடம் கொடுத்ததாக குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த தேதியில் என்னிடம் புகார் அளிக்கப்படவில்லை. 11.02.2020ம் தேதி அன்று பகல் 12.00 மணிக்கு பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினம் பகல் 03.00 மணிக்கு தயார் செய்ததாக மகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

3. 1ம் எதிரி அ.சா.1ன் மீது கொடுத்த புகாரின் மீது 08.02.2020 அன்று நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் விசாரணை சாட்சியத்தில் செஞ்சி வழக்கறிஞர் சங்கத்தில் புகார் கொடுத்துவிட்டு அதன் பின்னர் செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 வழக்கறிஞர் என்பதால் அவரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்ற காரணத்தினால் அவர் கொடுத்த புகாரின் மீது எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. அ.சா.1 வழக்கறிஞர் என்பதால் அவர் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர் போராட்டம் செய்துவிடுவாரோ என அஞ்சி கடந்த 08.02.2020 அன்று கொடுத்த புகாரை மறைத்து 11.02.2020 அன்று புகார் கொடுத்ததாக குறிப்பிட்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்து சுமார் 4 நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை. நான் அதற்கான காரணத்தை இறுதி அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவம் இரண்டு இடங்களில் நடைபெற்றதாக அ.சா.1 புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் இரண்டாவதாக நடந்த சம்பவத்திற்கு தான் நான் பார்வை மகசர் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. சூர்யா மருத்துவமனையில் கண்காணிப்பு கேமராக்கள் இருந்தது என்றால் தற்போது நினைவில் இல்லை. மேற்படி மருத்துவமனை காவல் நிலையத்தை ஒட்டியவாறு அமைந்துள்ளது என்றால் சரிதான். சூர்யா மருத்துவமனையினிடம் சம்பவம் நடந்திருந்தால் அது விவரம் காவல் நிலையத்தில் இருந்து பார்த்தாலே தெரிந்திருக்கும் என்றால் மேற்படி மருத்துவமனையானது காவல் நிலையத்திற்கு இடதுபுறத்தில் அமைந்துள்ளது எனவே வெளியே வந்து பார்க்கும்பட்சத்தில் தான் தெரியும்.

3. சூர்யா மருத்துவமனையின் ஊழியர்கள் மற்றும் அருகில் இருந்த நபர்களிடம் இவ்வழக்கு தொடர்பாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்றால் எனது விசாரணையில் நான் அதை பற்றி கேட்கவில்லை அவர்களும் அதை பற்றி என்னிடம் குறிப்பிடவில்லை. மேற்படி இரு சாட்சிகளும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், அதனை மறித்துவிட்டதாகவும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் என்னிடம் அவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடவில்லை. மேற்படி சாட்சிகளை நான் 08ம் தேதி விசாரித்ததாக முதல் விசாரணையில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு ஆகும்.

4. 2ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 294(பி) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். 2ம் எதிரி தடியை காட்டி மிரட்டியதாக அ.சா.1– என்னுடைய விசாரணையின்போது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் 2ம் எதிரி அவரை தடியை காட்டி மிரட்டி தாக்க வந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சம்பவம் இடம் செல்லாமல் வழக்கின் கோப்புகளை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றாலும் எனவே தான் நான் இரண்டு பார்வை மகசர்கள் தயார் செய்யாமல் ஒரே ஒரு பார்வை மகசர் தயார் செய்துள்ளேன் என்றாலும் எனவே தான் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் நீதிமன்றத்தில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

**1ம் எதிரியின் குறுக்கு விசாரணையும் 2ம் எதிரியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.